சி.சி. எண். 281 /2017 தேதி=05/12/2018

திருமதி. சரஸ்வதி என்பவரின் குறுக்கு விசாரணை ம.த.சா.1=

எதிரியை எனக்கு எதிரியின் மாமியார் மேரி சித்ரா மூலமாக தெரியும், எதிரியின் மாமியார் சீட்டு பிடிக்கும் தொழிலில் உள்ளார். எதிரிக்கு அவ்வாறு எந்த மாமியாரும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் திருமணத்திற்காக தான் மேரி சித்ரா எதிரிக்கு தொகை கொடுக்க சொன்னார். எனக்கு 2009லிருந்து மேரி சித்ரவை தெரியும். நான் எதிரியின் திருமணத்திற்கு செல்லவில்லை. எதிரிக்கு எந்த இடத்தில் திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. மேரி சித்ரா குடும்ப நண்பரா என்றால் கிடையாது. தெரிந்தவர்கள் தான். 2009 வருடம் 10ம் மாதம் நான் மேரி சித்ரா மூலமாக நான் எதிரிக்கு ரூ. 4,00,000/= ம்பணம் கொடுத்தேன். எதிரிக்கு திருமணம் வடபழனி கோவிலில் தான் நடந்தது என்றும், திருமண செலவிற்காக ரூ. 4,00,000/=ம் வாங்க வாய்பில்லை என்றாலும், எதிரிக்கு எங்கு திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. திருமண செலவிற்காக தான் ரூ. 4,00,000ம் வாங்கினார். எதிரி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.